# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
# S.C.No.228/2009

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 12 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தென்னரசன் (அ.சா.11) | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| த/பெ., க/பெ. | : | சக்திவேல் | வயது | : | 54 |
| கிராமம் | : | பழனி | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 12.11.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1ம் எதிரி முன்னிலையாகியுள்ளார்.

2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் தற்போது பழனி தாலுகாகாவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.04.2004ம் தேதி வாதி செல்வம் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.மகாமுனி என்பவர் நிலைய குற்ற எண்.330/2004 சட்டப்பிரிவு 394 இ.த.ச. படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் புலன் விசாரணைக்காக அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.கர்ணன் அவர்களுக்கு ஒரு நகலை சமர்ப்பித்துக்கொண்டார். மேற்சொன்ன கர்ணன் என்பவர் இறந்துவிட்டார். அவருடைய கையெழுத்துக்கள் எனக்கு நன்கு தெரியும் என்பதால் தற்போது சாட்சியமளிக்கிறேன். முதல் தகவல்

அறிக்கை பெற்று சம்பவ இடம் சென்று 30.04.2004 ம்தேதியன்று பகல் 12.00 மணி சுமாருக்கு சாட்சிகள் தமிழ்ச்செல்வன் மற்றும் ராதாகிருஷ்ணன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13. அன்றே பகல் 15.00 மணி சுமாருக்கு சம்பவத்தில் தொடர்புடைய இரண்டு எதிரிகளையும் நெய்க்காரப்பட்டி பஸ் ஸ்டாப்பில் வைத்து கைதுசெய்தும், 1ம் எதிரிநடராஜன் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், 2ம் எதிரி குமார் என்ற கிருஷ்ணகுமாரிடம் 16.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும் சம்பவத்தில் எதிரிகள் பயன்படுத்திய கத்தி ஒன்றையும், வாதியிடம் எதிரிகள் வழிப்பறி செய்த பணம் ரூ.1500/−ஐயும் 1ம் எதிரியிடம் ரூ.1000/−மும், 2ம் எதிரியிடம் ரூ.500/−ம் முறைப்படி கைபற்றுதல் மகஜரில் கைப்பற்றியும், சாட்சிகள் ஈஸ்வரன் மற்றும் சுரேஷ் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றும் எதிரிகளை அன்றே அடைப்புக் காவலுக்கு அனுப்பியுள்ளார். சான்று பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.14. 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.15. 1ம் எதிரியிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.16. 2ம் எதிரியிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.17. சான்று பொருட்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதற்கான இரண்டு படிவம் 91 முறையே அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.ஆ.19. பழனிச்சாமியின் ஓட்டுனர் உரிமம் சா.பொ.3. காவல் ஆய்வாளர் மேற்படி வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 392, 394, உ/சே.397 மற்றும் 75 இ.த.ச. படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து 1ம் எதிரியானவர் மதுரை மேலூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.347/1999 அதன் சி.சி.எண்.251/1999 வழக்கில் சட்டப்பிரிவு 394 ன்படி ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை 28.04.2000ம் தேதி பெற்றுள்ளார் என்றும் குறிப்பிட்டு குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன

மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்ற சி.சி.எண்.251/1999 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு விபரம் அ.சா.ஆ.20.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 வழக்கில் தனது உண்மையான முகவரியை கொடுக்கவில்லை என்றால் அவர் தனது பணியிட முகவரியை கொடுத்துள்ளார். நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகளை அடையாள அணிவகுப்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. புகார் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரரின் காயம்பட்ட ஆடைகளை கைப்பற்றவில்லை என்றால், சொற்பக்காயங்கள் என்பதால் ஆடைகளை கைப்பற்றவில்லை. காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்வதற்கு முன்பாகவே எதிரிகளை கைது செய்து வழக்கு பதிவு செய்ததாகச் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.11.12 18:31:24 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.